# பிரபஞ்சன்



# கருத்து கலையாவது எப்போது?

வாசகர் அபிமானம் முதல் சாகித்ய அகாதமி விருது வரை பெற்றவரான எழுத்தாளர் பிரபஞ்சன் இலக்கியவாதிக்கு இலக்கியத்துடனும் அரசியலுடனும் வாசகருடனும் உள்ள உறவுகளைத் தன் சொந்த அனுபவ அடிப்படையில் இங்கே அலசுகிறார்...

**எழுதணும்னு முதன்முதலா உங்களுக்கு எப்ப தோணிச்சு...**

“கதையா எழுதணும்னு தோணல. ஆனால், எழுதறது ஒரு சுகமான அனுபவம்னு எப்ப தோணிச்சுன்னா.. நான் ஒன்பதாம் வகுப்பு படிக்கறப்போ ஒரு பொண்ணைக் காதலிச்சேன். அந்த சிநேகத்த வந்து அவளுக்குச் சொல்ல வேண்டியிருந்தது. நேர்லேயே சொல்லியிருக்கலாம். அந்த வாய்ப்பும் இருந்தது.

*ஆனாலும் கூட சொல்றதுக்கு தயக்கம். அத கடிதம் மூலமா எழுதிக் கொடுத்திடலாம்னு ஒரு காதல் கடிதம் எழுதினேன். ஒரு பக்கத்துல முடிக்கணும்னு என் நோக்கம். ஒண்ணு ரெண்டு பக்கம் வரைக்கும் போலாம். ஆனால் 3, 4, 5ன்னு 40 பக்கத்துல பாதி அளவுக்குப் போயிருச்சு. அவ்வளவு விஷயம் எனக்கு சொல்றதுக்கு இருந்துச்சு. அல்லது அவ்வளவு விஷயங்கள் எழுத முடியுது என்னால். இது எனக்கு வந்து ஒரு சுகமான அனுபவமா இருந்தது.*

*அந்தக் கடிதம் அப்பா கையில் கிடைச்சுடுச்சு. சரி பூசை விழும்னு எதிர்பார்த்துகிட்டு இருந்தேன். படிச்சிட்டு என்ன சொன்னார்னா, உனக்கு நல்லா எழுத வருது. நல்லா எழுதற. நல்ல விஷயமா எழுதேன். எதுக்கு இந்த மாதிரி விஷயம் எல்லாம் எழுதிகிட்டிருக்கேன்னு அப்பா சொன்னாங்க. அப்போ மனசுக்குள்ள ஒரு வித்து விழுந்த மாதிரி இருந்தது.*

*எங்க குடும்பம் வசதியான குடும்பம். நான் வசதியான குடும்பத்தைச் சார்ந்த பையன்கிறதால, தெருப்பையன்களோட சேருவதற்கு அனுமதிக்கப்படல. ஆகவே நான் வீட்டுக்குள்ளே படிக்க வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டது. தனிமை, படிப்பு ரெண்டும்தான் என்னை எழுத வைத்தவை.”*

**உங்களை உருவாக்கின, செழுமைப்படுத்தின போக்குன்னு முக்கியமாப் பார்த்தா - இடது சாரி இலக்கியப் பார்வைதான் பிரதானமாத் தெரியுது. ‘நம்ம எழுத்து மக்களுக்குப் போய்ச் சேரணும்ங்கிற கருத்து தாமரையில எழுத ஆரம்பிச்சதும்தான் தோணிச்சு’ன்னு சொல்லியிருக்கீங்க. இன்றைக்கு 20–25 வருஷம் கழிச்சு இன்னும் அதே பார்வையோட தான் இருக்கீங்கன்னு சொல்ல முடியுமா? அல்லது மாற்றங்கள் வந்திருக்கா?**

*“நிறைய மாற்றங்கள் வந்திருக்கு. உதாரணத்துக்கு 25 ஆண்டுகளுக்கு முன்பாக நீங்க சொன்ன மாதிரி இரண்டு விஷயங்கள்தான் இருந்தது. ஒன்று தேசிய அரசியல், இன்னொன்று தமிழக அரசியல். இதனோட இடதுசாரி பார்வையைக் கொண்ட அரசியல் நோக்கு. ஆனால், இப்ப வந்து தலித் இலக்கியம், பெண் இலக்கியம் வந்திருக்கு. வெளிநாட்டு இலக்கிய இசங்களைக் கொண்ட பெரும்பான்மை வந்து கலைக்கு முக்கியத்துவம் கொடுக்கிற ஒரு போக்கு வந்திருக்கு. இதுபோன்ற பல போக்குகள் வந்திருக்கு.*

*நாங்க பயின்றது என்பது தொடக்க கால மார்க்சியம். அப்போ இடதுசாரி இயக்கத்துக்கே கலையப் பத்தின, இலக்கியம் பற்றிய பார்வை ஒண்ணு இருக்கு பாருங்க. அது இன்னைக்கு இருக்கிற*

அளவுக்கு செழுமையாக இருந்ததாக சொல்ல முடியாது. சோசலிச யதார்த்தவாதம் என்ற சித்தாந்தத்தை முன்னாடி வச்சித்தான் தாமரையும், செம்மலரும். இதுபோன்ற இடதுசாரி இயக்கங்களும் இயங்கினார்கள்.

அப்போ எனக்கு நல்லா ஞாபகம் இருக்கு. ஒரு பேங்க்ல வேலை செய்யற ஒரு பியூன் லஞ்சம் வாங்கினார். அப்படிங்கற குற்றச்சாட்டு உருவானதால, ஒரு பியூன் லஞ்சம் வாங்கியது தவறு என்பதான ஒரு கருத்தை தனியாக வைத்து ஒரு கதை எழுதியிருக்கிறேன். அது தாமரைல வந்திருக்கு. இதை விமர்சனம் செய்த ஒரு இடதுசாரி விமர்சகர் ஒரு தொழிலாளி வர்க்க தோழன் ஒருத்தன் தவறு செய்தான் என்பது மாதிரி எழுதினது தப்புன்னு விமர்சனம் அனுப்பிச்சாரு. அப்பவும் சரி. இப்பவும் சரி - தப்பு செய்தவன் யாராக இருந்தாலும் அது தப்புன்னு சொல்லக்கூடிய போக்குல வந்து இலக்கியம் படைக்கிறோம்.

அதை நான் கடைப்பிடிக்கிறேன். கடைப்பிடிக்கணும்னு ஆசைப் படறது ஒண்ணு. ஆனா, இரண்டாவது ஒரு அரசியல் உள்ள வருது. இதுல ஒரு தொழிலாளி திருடறான் அப்படின்னு நீங்க எழுதினீங்கன்னா, தொழிலாளி வர்க்கத்தையே திருட்டு வர்க்கம் அப்படீன்னு நினைக்கமாட்டானா? என்று ஒரு கேள்வி வருது. அப்படி இல்லை. எந்தச் சூழல் வந்து, ஒருத்தனைத் திருட வைத்தது அப்படீன்னு எழுதறதுதான் எழுத்தாளனோட கடமையாக இப்ப நான் நினைக்கிறேன்.

நான் எழுத ஆரம்பிக்கும்போது, காந்தியப் போல அல்லது இது போல மாடலாகயிருக்கிற மனிதர்களைப் பத்திப் படைக்கணும். எழுதணும். உயர்ந்த கருத்துக்களையுடைய மனுஷர்களை படைக் கணும். இலக்கியத்தில் வருபவர்கள் அப்படிப்பட்டவர்களை படைக்க ணும்னு அப்ப எனக்குச் சொல்லப்பட்டது.

இப்ப 25 வருடங்களுக்குப் பிறகு எனக்கு என்ன தோணுதுன்னா, மனிதர்களிடம் நாம நினைக்கற மாதிரி அவ்வளவு உயர்வான குணங்கள் அடிப்படையாக இருக்கான்னு எனக்குத் தெரியலை. மனிதர்கள் எப்படி இருக்காங்கன்னா, சல்லித்தனங்கள் அதிகமாகக் கொண்ட மனிதர்கள்தான் அதிகமாக இருக்காங்க. நாமெல்லாம் வாழும் காலத்துல, நாமெல்லாம் ரொம்ப உத்தமர்களாக வாழ ஆசைப்படறோம். ஆசை மட்டும்தான் படமுடியுது.

கௌரவம் என்பதும் நாகரிகம் என்பதும் பண்பாடு என்பதும் ஓரிடத்தில் இருக்கு. அந்த இடத்தை நோக்கி நாம் போகணும்னு

*ஆசைப்படறோம். ஆனால், நாம் வாழறது ரொம்பக் கீழேதான். நாம ரொம்ப காம்பரமைசோடதான் வாழ்ந்துகிட்டு இருக்கோம். இழந்துதான் வாழ்ந்துகிட்டு இருக்கோம். இந்த இழப்பையும், மனிதன் மனிதனா வாழ முடியாமப்போன சூழல் இருக்கு பாருங்க அதையும் எழுதுவது மார்க்சியத்துக்கு விரோதமானது அல்ல என்கிற கருத்தோட்டத்திற்கு இப்ப நாம வந்திருக்கோம். ஏன்?- மார்க்சியமே இப்ப அந்த கருதுகோளுக்கு வந்திருக்கு. ஆகவே 25 ஆண்டு முந்தி இருப்பதைவிட, இப்ப இலக்கியப்போக்கு மாறி வந்திருக்கு''*

**கவிதைகள் முன்பு எழுதினீர்களில்லையா?**

*“ஆமாம். வானம்பாடியைச் சேர்ந்த ஒரு நண்பர், நீங்க மாயகாவ்ஸ்கி மாதிரி எழுதறீங்க அப்படீன்னு சொல்லிட்டு எனக்குக் கடிதம் எழுதியிருந்தாரு. அதுக்கு முந்தி நான் மாயகாவ்ஸ்கி கவிதைகளைப் படிச்சதில்லை. பிறகு மாயகாவ்ஸ்கி கவிதைகளை தொ.மு.சி. ரகுநாதன் மொழிபெயர்ப்புல படிச்சேன். படிச்ச பிறகுதான் ஒரு உண்மை தெரிந்தது. நான் அவரை மாதிரி எழுதலை. என்னை ‘மாயகாவ்ஸ்கி மாதிரி எழுதறீங்க’ அப்படின்னு சொன்னாரு பாருங்க. அவருக்கே மாயகாவ்ஸ்கி தெரியாதுங்கிற உண்மை.''*

**உங்கள் கட்டுரைகளில் ஒரு பத்தாண்டுகளுக்குள்ளே, ரொம்பத் தீவிர அரசியல் நிலைப்பாடுகள் எல்லாம் எடுத்து பிறகு அதற்கு எதிரா நீங்களே கருத்துக்களை தெரிவிக்கிற ஒரு கால கட்டம் நடந்திருக்கு இல்லையா?**

*“ஆமா''.*

**குறிப்பா பாட்டாளி மக்கள் கட்சியோட உங்களை ஐக்கியப்படுத்திக் கொண்டது. பொது மேடையில் ஒன்றாகத் தோன்றியது. டாக்டர் ராமதாசை ஆதரித்துப் பேசியது. பின்னாளில் விலகி வந்தது - இதேபோல திராவிட இயக்கத்தை கடுமையா விமர்சனம் பண்ணி யிருக்கீங்க. பின்னாடி அதே திராவிட இயக்கத்தைக் கடுமையான அனுதாபத்தோட அணுகியிருக்கீங்க. முதலில் இடதுசாரி பார்வையில் இருந்ததால திராவிட இயக்கத்தைக் கிண்டல் பண்ணினீங்களா? பின்னாடி உங்க பார்வைமாறிடுச்சா? இந்த மாற்றங்கள் ஏன் அடிக்கடி இப்படி அரசியல் ரீதியாக நிகழ்கிறது. இது மனிதனாக உங்களுக்குள்ள ஏற்படற சிக்கலா? அல்லது இலக்கியவாதி அரசியலை எதிர்கொள்கிறபோது வரும் சிக்கலா?**

*“ஒரு இலக்கியவாதியா நான் தெளிவா இருக்கேன். எனக்குப் புற உலகம் இருக்கு. அதான் தெளிவா இல்ல. சிக்கலே அதான். தெளிவில்லாத வெளி உலகத்தோட, எனது தெளிவான அகவயமான உள் உலகத்துக்கு ஏற்படக்கூடிய சிக்கல் இருக்கு பாருங்க. அதுதான்*

பிரச்னை. நான் அரசியல்ல தீவிரமான நிலைப்பாடு எடுத்து தீவிரமா கட்டுரைகள் எழுத ஆரம்பிச்சது எப்போன்னா இந்த பிற்பட்ட மக்களுக்கு, மண்டல் சிபாரிசு அறிமுகப்படுத்திய வி.பி.சிங். காலகட்டம் இருக்கு பாருங்க. அந்த சமயத்தில்தான் டெல்லி பல்கலைக்கழகத்து மாணவர்கள் ஷூவுக்கு பாலீஷ் போட்டுகிட்டு இருக்காங்க. ஒரு பத்திரிகையாளர் கேக்கறார்! எதுக்கு நீங்க எல்லாம் ஷூவுக்கு பாலீஷ் போடுறீங்கன்னு... இனிமே மண்டல் அமல்படுத்தப்பட்டால், ஷூவுக்கு பாலீஷ் போடவேண்டி இருக்கும்னு சொன்னாங்க.

நான் முதல் கட்டுரையை இப்படித்தான் ஆரம்பிக்கிறேன். 'போடுங்களேன், அதனால் என்ன நீங்க ஷூ பாலீஷ் போட்டா சிறப்பா இருக்காதா என்ன? இரண்டாயிர வருஷ காலமா ஒரு சாதி போட்டுக்கிட்டுத்தானே இருந்தது. யாரு போட்டாலும் ஷூவுக்கு பாலீஷ் ஏறுமே...' அப்படீன்னு கட்டுரையை ஆரம்பிக்கிறேன்.

நம்ம நாட்டுல அரசியல் ரீதியான கட்டுரையில் சித்தாந்த ரீதியான உண்மையச் சொன்னா... சித்தாந்த ரீதியான பதில் வர்றதில்லை... இங்க என்ன ஆகும்னா தனி மனித ரீதியில தாக்குதல் எதிர் அணியில இருந்து வரும். எனவே அந்தத் தனி மனிதத் தாக்குதலைத் தடுத்து நிறுத்துவதற்காக நானும் தனி மனிதத் தாக்குதல் நடத்த வேண்டியிருந்தது.''

**தனி மனிதத் தாக்குதலில் இறங்குவது படைப்பாளியாக, இலக்கியவாதியாக, மனித நேயத்துல அக்கறையுள்ள ஆளாக, உங்களுக்கு ஒரு வேதனையான விஷயம் இல்லையா?**

''மிக மிக வேதனையான விஷயமாக இருந்தது. இருக்கிறது. அதை நான் ஃபேஸ் பண்ணேன்- உதாரணத்துக்கு ஒரு விஷயம் சொல்றேன். டாக்டர் ராமதாசை எந்தக் கட்டத்துல நான் ஆதரிச்சேன் என்பதைப் பார்க்கும்போது சரியாக இருக்கும். காவிரியில தண்ணி விட மாட்டோம்னு பங்காரப்பா சொன்னதால ஆயிரம் கார்ல, பஸ்ல போயிட்டு எல்லையில நாங்க மறியல் பண்ணுவோம்னு சொன்னாரு பாருங்க அந்தக் காலக் கட்டத்துல நான் ராமதாசை ஆதரிக்கிறேன். அதே ராமதாஸ் காங்கிரசோட கூட்டணி சேருவோம்னு ஒரு காலகட்டத்துல சொன்னாரு பாருங்க- அப்ப அவரை மிகக் கடுமையா விமர்சிச்சு எழுதினதும் நான்தான்.

ஆகவே, ஒரு குறிப்பிட்ட ஒரு பிரச்சனைக்காக ஒருத்தரை ஆதரிக்கப்போய் அவர் அதைக் கைவிடும்போது அவர்கள் எதிர்ப்பாளரா நான் மாறுகிறேன். இதை வெளியிலிருந்து பார்த்த ஒரு

*பார்வையாளனுக்கு, ஒரு வாசகருக்கு நேத்து சொன்ன ஒரு கருத்தை இன்னைக்கு மறுக்கறாரே என்று தோன்றும் - இந்த சிரமமும், சிக்கலும் ஐந்து வருடகாலம் என்ன பீடிச்சது. ஒரு ஆண்டு முடிஞ்சி அடுத்த ஆண்டு பிறக்கிறபோது - 31-ம் தேதி இரவு நான் வந்து ஒரு கணக்கு பார்ப்பேன். கடைகள்ள பார்ப்பதைப் போன்று. இந்த ஆண்டுல நாம என்ன சாதித்தோம், எத்தனை உருப்படியான காரியம் பண்ணோம்னு பார்ப்பேன்.*

*எத்தனைக் கதைகள் தோற்றுபோய் இருக்கு - எத்தனை கதைகள் ஜெயிச்சோம்... அப்படின்னு கணக்கு பார்ப்பேன்... அப்படிப் பார்க்கிறபோது 89-ம் ஆண்டு மட்டுமல்ல- 88ம் 87ம் 86ம் ஆண்டு கூட தோற்றுப்போன ஆண்டுகளாக என் கணக்குல இருக்கு. ஏன்? அப்படின்னு நான் யோசிக்கிறேன். படைப்பு குறைந்து சண்டை மிகுந்தது. அதுதவிர நான் மட்டுமே செய்யக்கூடிய எழுதக்கூடிய கதைகளை எழுதாமல் - எல்லாருமே செய்யக்கூடிய, எல்லாருமே எழுதக்கூடிய, எல்லாருமே போராடிக்கிட்டிருக்கிற பிளாட்பாரத்தை தான் நானும் பயன்படுத்திக்கிட்டிருக்கேன் அப்படிங்கிறத உணர்கிறேன். இது தவறு என்று அந்த நிமிஷம் நான் முடிவு எடுத்தேன்"*

**ஒரு படைப்பாளிக்கு இலக்கியம், அரசியல் பற்றி எல்லாம் ஒரு நிலையான பார்வை எப்போதும் நிரந்தரமாக இருக்க முடியுமா?**

*"இருக்க முடியாதுதான். அதாவது வரலாற்றுப் பூர்வமாக பார்க்கலாம். விதவை மணம் என்பது சித்தாந்தப் பூர்வமான கருத்து - இத முதல்ல அரசியல்வாதி பண்ணலை.. எழுத்தாளன் தான் முதல்ல உருவாக்கினான். 3,4,5 வயசுல பெண்களுக்குத் திருமணம் பண்றது மிகப் பெரிய இழிவு. அது பெண்ணினத்துக்கு மிகப் பெரிய சாபக்கேடு. அப்படீன்னு முதல்ல கருத்து உருவாக்கினவன் கலைஞனாகத்தான் இருப்பான். எழுத்தாளன்தான். நாடகக்காரன்தான். பிறகுதான் அரசாங்கம், அதாவது பொதுமக்களிடையே கருத்து ஒன்று உருவான பிறகு அரசாங்கம் அதை சட்டப் பூர்வமாக்குகிறது.*

*இப்படிக் கலைஞர்களும், எழுத்தாளர்களும் சேர்ந்து சமூகத்துல கருத்து உருவாக்கம் பண்றது இருக்கு பாருங்க - அந்த கருத்து உருவாக்கத்துல அரசியல் இருக்கிறதாதான் நம்பறேன். அது என்றும் மாறாது. கருத்து நிகரான அரசியலை இந்த அரசியல்வாதிகள் எதுவும் பண்ணிவிடமுடியாது."*

**இலக்கிய வடிவத்துக்கு வருவோம். நீங்க இறுதில பின்பற்ற**

**வேண்டியது எந்த வடிவம் என்பது பற்றிய கருத்து மாறிகிட்டே இருக்கு இல்லையா?**

*"அது அப்படித்தான் மாறும். ஏன்னா.. ஒரு வடிவத்துக்கு உள்ளேயே ஒருவனால் ஒடுங்கிட முடியாது. எந்த உள் அடக்கத்தை எடுத்துக்கொள்கிறோமோ... எந்தக் காலகட்டத்தின் அரசியலைச் சொல்கிறோமோ இலக்கியத்துல அதுக்கு தகுந்த மாதிரி வடிவம் மாறிக்கிட்டுதான் இருக்கும். சொல்முறையும் பிரசன்டேஷனும் மாறிக்கிட்டுதான் இருக்கும்.*

*வரலாற்றுப்பூர்வமான நாவல்கள்னு வரும்போது அந்தக் காலத்துக்கு நாம விசுவாசமா இருக்கணும். நான் 18ம் நூற்றாண்டு நாவலை எழுதியிருக்கேன் என்றால் 18-ம் நூற்றாண்டு மனிதன் சிந்திக்கிறது எந்த அளவுல இருக்கும். அவன்கிட்ட சேர்ந்திருக்கிற செய்தி இருக்குபாருங்க* (Message) *அந்த அளவுக்கு தான் சிந்திக்க முடியும்- எழுதமுடியும். அதற்குள்ளே இந்த மானிடத்தை அடுத்த கட்டத்துக்குக் கொண்டு போகறதுக்கான போராட்டம் இருக்கு பாருங்க அத எழுதணும். என்னைப் பொறுத்தவரைக்கும் - ஏன் காந்தி உருவானார் என்று எழுதுவதைக்காட்டிலும் கோட்சே ஏன் உருவானான் என்பதுதான் எனக்கு முக்கியமான விஷயமா இருக்கு. காந்திய உருவாக்க முடியும்- ஆனால், கோட்சேதான் உருவாகக் கூடாது. எனவே கோட்சே எந்த சூழ்நிலையில் உருவாகினான் என்பதை ஆராய்வதுதான் இலக்கியமாக இருக்க முடியும்."*

**கருத்து வெளிப்பாடு எந்த கட்டத்துல பிரசாரமாக மட்டும் இல்லாமல் - கலையாக மாறுது? கலையாக மாற்றம் நிகழ்வது எப்ப? இப்ப கோட்சே உருவாவது எப்படின்னு - அதை தடுப்பது எப்படின்னு கட்டுரையும் எழுதலாம். அதை ஒரு கதையில வெளிப்படுத்தும்போது கலையம்சம் எப்படி வருது?**

*"இது ஒரு முக்கியமான விஷயம்தான். ஒரு கலை எந்த இடத்தில இலக்கியமாகுது, கதையாகுது, எந்த இடத்துல பிரசாரமாகுது? எனக்கு உடனே ஞாபகத்துக்கு வர்றது - ரஷ்ய எழுத்தாளர் செக்காவின் கதை. 'ஒரு பொது இடத்துல ஒரு தனி மனிதனை ஒரு நாய் கடிக்குது' அதுதான் விஷயம். கடிச்ச நாய் தெரு நாயா, அல்லது பணக்கார வீட்டு நாயா, அல்லது அதிகாரி வீட்டு நாயா என்பதுதான் பிரச்னை.*

*அதிகாரி வீட்டு நாயாக இருக்கிறபோது போலீஸ், மனிதன் மேல் குற்றம் சுமத்துது. ஏண்டா நீ ஏதாவது வந்து பண்ணியிருப்பே அந்த நாய் சும்மா கடிக்குமா? நாயக் கோபப்படுத்தினாத்தான் அது*

கடிக்கும். அப்படின்னு போலீஸ்காரன் சொல்றான். பிறகு அது அதிகாரி வீட்டு நாயல்ல, ஒரு சாமான்யன் வீட்டு நாய் அதாவது ஒரு தனிமனிதனோட நாய் எனும்போது மனிதன் நல்லவனாகவும் நாய்தான் குற்றவாளியாகவும் கருதப்படுகிறது. அதிகாரி வீட்டு நாயாகக் கருதப்படுகிறபோது மனிதன்தான் தப்பு செய்தான்னு அவன் மேல கேஸ் போடறாங்க. இதை மேலோட்டமாகப் பார்க்கிறபோது.. ஒரு நகைச்சுவைக் கதையாகத் தோணுது.

ஆனால் இந்த நூற்றாண்டின் தொடக்கத்துல புரட்சிக்கு முந்தைய காலகட்டத்தில் ரஷ்யாவின் தனி மனிதன் வாழ்க்கை இருக்கு பாருங்க... அதை மிகச் சிறப்பாக இந்தக் கதை சித்தரிப்பதாக எனக்குத்தோன்றுகிறது... ஒரு தனி மனிதனுக்கு சாதாரணனுக்கு அதிகார மையத்துல எந்த இடமும் இல்லை மரியாதை இல்லை என்பதை இந்த கதைச் சித்தரித்தது. ஆயிரம் பக்கங்களுக்கு ஜார் அரசரின் கொடுமை என்ற தலைப்பின் கீழ் எழுதுவதைக் காட்டிலும் மிகப் பெரிய வெற்றியை இந்தக்கதை நிகழ்த்தியது. இந்த கதையைப் படிச்சிட்டு மிகப்பெரிய கொந்தளிப்பு எழுந்ததாகக்கூட வரலாறு சொல்லுது. ஒரு கருத்து கலைவடிவம் பெறுகிறபோது - அது மனிதாயப்படுத்தப்படணும் - மனிதாயப்படுத்தப்பட்டால் அது இலக்கியமாக நிற்கும்.''

**மனிதாயப்படுத்த படுவதற்கு என்று சொல்லும்போது அதை இப்படி விளங்கிக்கலாமா? கதையை, படைப்பை படிக்கக்கூடிய வாசகர்களுக்கு தனிமனிதன் என்கிற விதத்தில் அவர்களுடைய உணர்வுகளோடு ஏதோ ஒரு இடத்தில் இந்தக் கதையில சொல்லக்கூடிய உணர்வுகள் - ஒத்துப்போக வேண்டியிருக்கு. அப்படி ஒத்துப்போகும்போதுதான் அது மனிதாயப்படுத்தப்படுவதாகச் சொல்லலாமா?**

''இலக்கியவாதி, வாசகன் இரண்டு பேருடைய கூட்டுலதான் இலக்கியம் இருக்கு. இலக்கியவாதி ஒரு இலக்கியத்தை படைத்து வாசகனுக்கு - வாசகன் வாங்கிக்கொள்வதற்கு இட்டு நிரப்புகிறான். வாசகனுக்காக ஐம்பது பர்செண்ட் இடத்தை காலியாக வைச்சிருக்கான். இலக்கியவாதி- எல்லாத்தையும் சொல்றதில்லை. ஆகவே இந்தக் கதையில் முதல் பகுதி இதுன்னு பழங்காலத்துல ஆரம்பிப்பான். பல இலக்கியங்கள்ள உண்டு. நல்ல இலக்கியங்களுக்கான லட்சணங்கள்ள அதுவும் ஒன்று. ஆக, ரெண்டுபேரும் சேர்ந்து கூட்டுத் தயாரிப்புலதான் இலக்கியம் பிறக்குது.

ஒரு நல்ல உதாரணத்தைச் சொல்லலாம். கதை கருத்துங்கற விஷயத்துக்கு திரும்பவும் வருவோம். சிலப்பதிகாரத்தையும் மணிமேகலையையும்கூட நல்ல உதாரணத்துக்குச் சொல்லலாம்.

சிலப்பதிகாரம் கற்பின் மகிமையை உலகத்துக்கு சொல்லுகிறது. கற்புடைய பெண்களை உலகம் ஏற்கும் என்ற கருத்துக்காகக் கதை பண்ணுகிறார் இளங்கோவடிகள். கருத்து மறைந்து கண்ணகி மட்டும் அங்கே நிற்கிறாள்.

கண்ணகி - கண்ணகியோட செயல்பாடு - மன்னவனும் நீயோ? அப்படினு கேடகிறாளே... அதுக்கு முன்னாடி ஒரு பத்து பதினைந்து வசனம்தான் இருக்கும். ஆனால், அரசவையிலே அதிகமாகப் பேசறா.. இந்த கருத்துரிமையை மனிதாயப்படுத்துவதற்கு கண்ணகியே ஒரு மனுஷியா அந்த கருத்தை நிறுத்தறதுல வந்து இளங்கோவடிகள் வெற்றிபெறராரு. அதனால அது இலக்கியமாகும். மணிமேகலையை எடுத்துக்கிட்டிங்கன்னா... அடிப்படையில கதைன்னு பாக்கிறபோது சிலப்பதிகாரத்தைக் காட்டிலும் சிறந்த கதை மணிமேகலை. ஏனென்றால் தமிழ் வரலாற்றுல முதல் தொடக்கமாக ஒரு பெண்ணை மையப்படுத்தி - ஒரு பெண்ணைக் கதாநாயகி ஆக்கி கதாநாயகனோட பிம்பமே இல்லாம பண்ணதுல மணிமேகலை ஒரு முக்கிய இடம் வகிக்கிறது. மணிமேகலையை அதைப் படைத்த சீத்தலைச்சாத்தனாரே சொல்றார். எப்படி சொல்றார்ன்னா, அவனுடைய நோக்கம் மணிமேகலைங்கிற மனுஷியை சித்தரிக்கிறதல்ல. கருத்துப்பூர்வமாக - அதே நேரத்துல அவனுக்கு பௌத்த கொள்கையை சொல்ல வேண்டியிருந்தது. பௌத்த கொள்கையைத் தூக்கலாக ஆக்கினதால, அங்கு இலக்கியமே செத்தது. அதை உதாரணமாகச் சொல்லலாம். புதுமைப்பித்தனையும், ஜெயகாந்தனையும்கூட உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்.

பொன்னகரம் கதையில் புதுமைப்பித்தன் தீவிரமான விஷயத்தை எடுத்துக்கொண்டு தோற்றுபோன கதை. கற்பு, கற்பு என்று கதறினீர்களே இதுதான்யா கற்பு என்று விளக்க உரை மாதிரி இரண்டு, மூணு பக்கத்துக்கு எழுதினாரு. பத்திரிகை காலங்கள்ல ரெண்டு மூன்று காலங்களை நிரப்புவதற்காக எழுதப்பட்ட கதையாகத்தான் நிற்கிறது. ஆனால் இதே விஷயத்தை ஜெயகாந்தன் அக்னி பிரவேசம்கிற கதைல சொல்றாரு.

தெருவுல போறோம் - ஏதோ மிதிச்சுடறோம்.... அசிங்கத்தை மிதிச்சுடறோம். அதுக்காக காலையா வெட்டிடறோம். அப்படின்னு சர்வ சாதாரணமா சொல்லிட்டு - இது ஒரு ஆக்ஸிடெண்ட் அப்படீன்னு எடுத்துக்கிட்டு... நம்ம பயணம் வந்து நீண்டது அப்படின்னா அந்த அம்மா... அந்தப் பொண்ணை அரவணைத்துக் கொண்டு போறாங்க அப்படின்னு சொன்னாரு பாருங்க இந்தக்

*கதை எவ்வளவு எபெக்டிவ்வா சொன்னாரு ஆனா இப்போ பார்த்தா, இந்தக் கதை கூட சிறப்பாயில்லை. அவரோட பிணக்கு இதைவிட நல்ல கதையா இருக்கு. கருத்து மறைஞ்சு, வாழ்க்கை தூக்கலா இருந்தா கதை வெற்றி பெறாது. நம்பகத்தன்மை ரொம்ப முக்கியம்.*

**பெருவாரியான மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் சந்திக்கிற தாங்கள் உணருகிற உணர்வை கதைப் பாத்திரங்களோடு உருவகிக்கிற நேரத்தில கதை வெற்றியடையுதுன்னு சொல்லலாமா? உதாரணமாக - கண்ணகியும் கோவலனும் - பெருவாரியான பெண்கள் கண்ணகி மாதிரியாகவும் பெருவாரியான ஆண்கள் கோவலன் போன்று மாதவியை தேடிக்கொண்டிருப்பதும், இதைப் பிரதிபலிப்பதால் சிலப்பதிகாரத்துக்கு ஒரு ஐடென்பிகேஷன் இருக்குன்னு பார்க்கலாமா?**

*“நீங்க சொல்றது சரியாப்படுது... எப்படீன்னா... தெரிந்த மனிதர்களை வாசகனுக்குச் சொல்லும்போதுதான் அவன் அன்யோன்யப் படுகிறான். அன்யோன்யமா ஃபீல்பண்ணும்போது அந்த மனிதர்களோடு வாழ ஆரம்பிக்கிறான். வாசகன் வாழ்ந்து பெறுகின்ற அனுபவம் இருக்கு பாருங்க... அந்த கதாபாத்திரத்தோட அவன் வாழ்கின்ற அனுபவம் இருக்கே... தன்மையும் செழுமைப்படுத்திக் கொண்டு - இலக்கியத்தையும் செழுமைப்படுத்துகிறான். இலக்கியம் சிறந்த இலக்கியமாக அறியப்பட்டதென்றால், அதற்குக் காரணம் - அது வாசகனை இட்டு நிரப்பிக்கொண்டிருக்கிறது என்று அர்த்தம்”.*

**–விண்நாயகன் 16.11.2000**

**தொகுப்பில் உதவி: பாஸ்கர் சக்தி, கணேஷ்.**

# அஜீத் குமார்



# ரஜினி + கமல் = அஜித்?

எல்லாரும் பரபரப்பாக இருக்கிறார்கள். அஜீத் குமாரைத் தவிர. புத்தர் மாதிரி உட்கார்ந்திருக்கிறார்.

ஆச்சரியமாக இருக்கிறது. மிகவும் பதட்டமான இளைஞர். சட்டென்று கோபம் வரக்கூடியவர். மனதில் பட்டதை யோசிக்காமல் சொல்லிவிடக்கூடியவர் என்றெல்லாம் கடந்த காலத்தில் பேரெடுத்தவர் அந்த அஜீத்தா என்று ஆச்சரியமாக இருக்கிறது.

பேசத் தொடங்குகிறோம். நடு நடுவே ஷாட் ரெடி என்று அழைப்பு. பதட்டமே இல்லாமல் மெதுவாக எழுந்து போகிறார். தோளையும் கைகளையும் குலுக்கிக் கொண்டு, பக்கவாட்டில் குதித்து கடைசியில் வானை நோக்கி ஜம்ப் செய்யும், பல முறை பார்த்த அதே நடன

அசைவுகள். செய்து முடித்து விட்டு திரும்ப என்னை நோக்கி அமைதியான நடை. விட்ட இடத்திலிருந்து பேச்சின் தொடர்ச்சி. சற்று தூரத்திலிருந்து பார்க்கிறவர்களுக்கு 'சினிமாவில் நடிப்பது இவ்வளவு சுலபமான, ஜாலியான வேலையா?' என்று கூடத் தோன்றிவிடலாம். அவ்வளவு அமைதியான தோற்றம்.

ஆனால் 29 வயதாகும் அஜீத் கடந்து வந்த பாதை மேடு பள்ளமும், குண்டும் குழியுமாய் பலமுறை இடறி விழச் செய்த பாதை. கார், மோட்டார் சைக்கிள் ரேஸ் வீரராக வேண்டுமென்ற வெறியில் பலமுறை விபத்துக்கள். முதுகுத்தண்டில் தொடர்ந்து அடி. அறுவை சிகிச்சை. ஆடை தயாரிப்புத் தொழிலில் சுமார் ஏழு வருட உழைப்பு; இறுதியில் பார்ட்னருடன் மனக்கசப்பு. ஏராளமான கடன். அதை அடைக்க மாடலிங், சினிமா நடிப்பு என்று இன்னொரு உலகத்துக்குள் வந்தவர் அஜீத்.

பின்பலம் இருந்தால் கூட தமிழ் சினிமாவில் வளர்வது கடினம். கார்த்திக் - முத்துராமனின் மகன். பிரபுவுக்கு அப்பா நடிகர் திலகம் விஜய்யின் குடும்பம். கலைக் குடும்பம். பிரசாந்தின் தந்தை பழைய ஹீரோ கம் வில்லன். சத்யராஜூம், சரத்குமாரும் சினிமா விநியோகம், பைனான்ஸ் ரூட்டில் அனுபவம் பெற்று வந்த நடிகர்கள். எந்த பின்பலமும் பின்னணியும் இல்லாமல் வந்தவர் அஜீத்.

குடும்பம் சினிமாவுக்கு சம்பந்தமில்லாத குடும்பம். அப்பா தஞ்சையை வேராகக் கொண்ட பாலக்காட்டு பிராமணர். மருந்துக் கம்பெனி அலுவலர். அம்மா இப்போது பாகிஸ்தானில் இருக்கும் கராச்சியைச் சேர்ந்த சிந்திப் பெண்மணி. அண்ணன் அமெரிக்காவில் குடியேறிவிட்ட என்ஜினியர். தம்பி குடியேறச் சென்று கொண்டிருக்கும் என்ஜினியர்.

அஜீத் மட்டும் பத்தாவதோடு நிறுத்திவிட்டு ரேஸிங் நோக்கிப் போய்விட்டவர். சென்னை ஆசான் மெமோரியல் பள்ளியில் படித்தது ஹிந்தி, பிரெஞ்ச். ("எல்லாம் மார்க்குக்காகத்தான்! இப்போதுதான் தமிழ் மெல்ல எழுதப் படிக்கக் கற்றுக்கொள்கிறேன்.") பிறகு கார்மெண்ட் தொழில், கடன்,

"கடனை அடைக்கப் பணம் வேண்டும். சினிமாவில் பணம் கிடைக்கும் என்றுதான் நடிகனானேன். அதனால்தான் ஆரம்பத்தில் கிடைத்த எல்லா படங்களையும் ஒப்புக்கொண்டேன். நிறைய தப்பு செய்திருக்கிறேன். காரணம். அப்போது எனக்கு சினிமா ஒரு Passion ஆக இல்லை. லயிப்பு வந்த பிறகு தப்பு செய்வதில்லை. பிடித்த வேலையைச் செய்ய காசும் கொடுக்கிறார்கள்!" என்கிற

அஜீத், சில வருடங்கள் முன்னால் தொடர்ந்து தன்னுடைய ஐந்து படங்கள் தோல்வியடைந்ததைப் பற்றிச் சொல்கிறார்.

“ஒரு படத்தில் சில தினங்கள் ஷூட்டிங் முடிந்ததுமே தெரிந்துவிடும். இந்தப் படம் என்ன ஆகும் என்று. ஓடக்கூடியதாக இருந்தால், எத்தனைநாள் போகும் என்றே சொல்லிவிடலாம். நான் அப்போதெல்லாம் சொன்னதைச் செய்துவிட்டுப் போய்க் கொண்டிருந்தேன். என் இன்வால்வ்மெண்ட் குறைவு. இப்போது அப்படியில்லை. மாறிவிட்டேன்.”

**மாறியது எப்படி?**

“என் அப்பாதான் சொன்னார். நீ ஒரு எஸ்கேப்பிஸ்ட். ஒவ்வொரு விஷயத்திலும் அடுத்த கட்டத்துக்குப் போகாமல் தப்பித்து ஓடப் பார்க்கிறாய். அப்படி செய்யாதே என்றார். அதுவரை நான் ஒரு ஃபெயிலியர். ரேசில் பெரிய ஆளாக முடியவில்லை. வியாபாரத்தில் ஜெயிக்க முடியவில்லை. படத்தில் நடித்தால் அதுவும் ஓடவில்லை. திரும்ப ஏதாவது வேலை தேடிக்கொண்டு சினிமாவை விட்டுப் போய்விடலாமா என்று கூட யோசித்தேன். அப்போதுதான் அப்பா சொன்னார் ஓடாதே. ஒவ்வொன்றை விட்டும் ஓடாதே. இருந்து முயற்சி செய். முயற்சி செய்தேன். ‘வாலி’யின் வெற்றி ஒரு எடுத்துக்காட்டு. அதில் நடிக்கும்போதே தெரியும். என்னை மிகவும இன்வால்வ் செய்து கொண்டு நடித்தேன். எது செய்தால் சரியாக வரும், எது வராது என்று யோசித்து செய்தேன்.”

**டைரக்டர் சொன்னபடி செய்ததுதானே?**

“அதற்கு மேலும் ஒரு நடிகன் செய்ய வேண்டும். இன்னும் என்னென்ன எல்லாம் செய்யலாம் என்று யோசித்து செய்ய வேண்டும்.”

**அதற்கு டைரக்டர் ஒப்புக்கொள்ள வேண்டாமா?**

“நான் வேலை செய்யும் டைரக்டர்கள் எல்லோரும் விவாதித்தால் ஏற்றுக்கொள்ளக் கூடியவர்கள்தான். ‘உன்னைக் கொடு என்னைத் தருவேன்’ படத்தில் ஷூட்டிங்கின்போதே சொன்னேன். கிளைமாக்ஸ் சரியில்லை. தயாரிப்பாளர் சௌத்ரி சாரிடமும் சொன்னேன். கடைசியில் நான் சொன்னதுபோலத்தான் ஆயிற்று.”

**தான் நினைப்பது சரி என்று உறுதியாக இருக்கும் டைரக்டரிடம் இப்படிச் சொல்ல முடியுமா?**

“முன்ன மாதிரி எந்த டைரக்டரும் இன்னிக்கு நடிகனுக்கு ஸ்கிரிப்டைக் காட்டாம, சொன்னபடி நடின்னு சொல்ல முடியாது.

*இது ஒரு டீம் ஒர்க். படமெடுக்கும் முறையே மாறிக் கொண்டிருக்கிறது. மணிரத்னம் கூட முன்பெல்லாம் நடிகருக்கு முன் கூட்டி ஸ்கிரிப்ட் தர மாட்டார். இன்றைக்கு அவரும் முன்னாலேயே நடிகன் ஸ்கிரிப்டைப் படித்துவிட்டு வந்தால் நல்லது என்று ஏற்றுக்கொள்கிறார். ஹாலிவுட் போல படத் தயாரிப்பின் ஒவ்வொரு விஷயமும் வெவ்வேறு ஆட்கள் செய்யும் விஷயமாக மாறி வருகிறது. டைரக்டர் ஒருங்கிணைக்கிறார். நடிக்கும்போது தான் விரும்பிய உணர்ச்சி கிடைக்கிறதா என்று பார்க்கிறார்.''*

**நடிகனும் நடிப்பை மட்டுமே பார்த்துக் கொண்டு போகாமல் ஸ்கிரிப்ட்டை ஏன் பார்க்க வேண்டும்?**

*''எனக்குப் பொறுப்பு இருக்கிறது. நான் ஐந்து தோல்விப் படங்கள் கொடுத்தால் கூட, ரசிகர்கள் என் அடுத்த படத்தை வந்து பார்த்தார்கள். அப்படியானால் என்னிடம் அவர்களுக்கு எதிர்பார்ப்பு இருக்கிறது. படம் பார்க்க வருபவர்கள் சாதாரண மனிதர்கள். கஷ்டப்பட்டு சம்பாதித்து அதில் 30 ரூபாய், 50 ரூபாய் கொடுத்து படம் பார்க்கிறார்கள். அவர்களுக்கு நான நியாயம் செய்ய வேண்டும். படம் சரியில்லை; ஆனால் நான் மட்டும் நன்றாக செய்திருக்கிறேன் என்று சொன்னால் எனக்கு சந்தோஷம்தான். ஆனால், அதில் என்ன பெருமை? படமும் நன்றாக இருந்தது என்பது முக்கியம் இல்லையா? அப்படியானால் அதற்கு எனக்கு ஸ்கிரிப்ட் தெரிய வேண்டும். ஒரே மாதிரி பாத்திரங்களை செய்து கொண்டிருக்கக் கூடாது. நான் நல்ல ஸ்கிரிப்ட்டுகளை, கேரக்டர்களைத் தேடுகிறேன்''.*

**ஏன் தேடவேண்டும்? ஒரே மாதிரி கேரக்டரில் எம்.ஜி.ஆரும், ரஜினியும் நடித்து வெற்றி பெற்றுக் கொண்டேயிருக்கவில்லையா?**

*''அவர்கள் விஷயம் வேறு. எனக்கு அது பொருந்தாது. என்னைப் பொறுத்தமட்டில் நான் வெரைட்டியாக செய்ய வேண்டும். அஜீத்தால் எது வேண்டுமானாலும் செய்ய முடியும் என்று பார்ப்பவர்கள் சொல்ல வேண்டும். இந்த கேரக்டர், அந்த இமேஜ்தான் என்று இல்லை. எல்லாவிதமான பாத்திரங்களும் செய்ய வேண்டும்.*

**அதுதானே சிவாஜி கணேசன், கமல்ஹாசன் பாணி?**

*''அப்படிச் சொல்வது சரியில்லை. இப்போது 'சிட்டிசன்' படத்தில் நான் ஒன்பது வேடங்களில் நடிக்கிறேன். கமல் சார் முப்பது வருடங்கள் உழைத்து அதன் பிறகு மாறுபட்ட ஒப்பனையை மேற்கொண்டு சாதித்ததை நான் ஏழே வருடங்களில் செய்து பார்க்க, அவர் எனக்கு உதவுகிறார் என்பது என் அதிர்ஷ்டம், ஹாலிவுட் சென்று மேக்கப் மேனைக் கொண்டு வருவதற்கு பதில்*

*அதே விஷயத்தை மும்பையிலிருந்து குறைந்த செலவில் செய்து கொள்ளலாம் என்று அவர் எனக்குச் சொல்ல வேண்டுமென்ற அவசியமில்லை. ஆனால், சொல்லி உதவியிருக்கிறார். ஆனால், அந்தப் படம், அந்தக் கதை ரஜினி சாருக்கேற்ற சப்ஜெக்ட், நான் கமல் சார் செய்யக்கூடிய மாதிரியான முயற்சிகளை, ரஜினி சாருடைய பார்வையாளர்களிடம் கொண்டுபோய் சேர்க்க முயற்சிக்கிறேன். இரண்டையும் இணைப்பதுதான் அஜீத்.''*

**என்ன முயற்சி? என்ன விஷயம்? சத்யஜித்ரே போலவா? அகிரோ குரோசோவா மாதிரியா? கமர்ஷியல் தமிழ் சினிமாதானே?**

*''என்னைப் பொறுத்தவரையில் சினிமா ஒரு எண்டர்டெயின்மெண்ட் மீடியம். நான் ஒரு எண்டர்டெயினர். அதில் எத்தனை விதம் இருக்க முடியுமோ, அத்தனையும் செய்து பார்க்க வேண்டும். செய்து காட்ட வேண்டும். அதற்கான புதுப்புதுப் பாத்திரங்களைத்தான் தேடுகிறேன்.''*

**எங்கிருந்து? எப்படி அவை கிடைக்க முடியும்? அந்த மாதிரி தேடித்தேடித்தானே கடைசியில் கமல் தனக்கான ஸ்கிரிப்ட்டை தானே எழுத ஆரம்பித்து விட்டார்? நீங்களும் எழுதுவீர்களா? எழுத வேண்டுமானால் முதலில் நிறைய படிக்க வேண்டுமே? படிக்கிற பழக்கம் உண்டா?**

*''தமிழில் படிக்கத் தெரியாது. ஆங்கிலத்தில் நிறைய படிப்பேன். ஆனால், கதைகள், ஃபிக்ஷன் படிக்க மாட்டேன். உண்மைக் கதைகள் போன்றவை, யுத்தம், போர்க்களம் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிகள், ரீடர்ஸ் டைஜஸ்டில் வரும் சம்பவங்கள் இவற்றைத்தான் படிப்பேன். என்சைக்ளோபீடியா படிப்பது பிடிக்கும். அதில் எந்த சப்ஜெக்டைப் பற்றியாவது எடுத்துப் படிப்பேன்''.*

**வித்தியாசமான பாத்திரம் ஒன்றில் நடிக்க ஆசைப்பட்டால், அதற்கு தயாரிப்பாளர் கிடைக்காவிட்டால், சொந்தப் படம் எடுப்பீர்களா?**

*அஜீத் சட்டென்று அழுத்தந்திருத்தமாகச் சொல்கிறார்:*

*''நிச்சயம் மாட்டேன். என் பணத்தை நான் நிச்சயமாக படத் தயாரிப்பில் முதலீடு செய்ய மாட்டேன்.''*

*அடி மனதில் கார்மெண்ட் தொழிலின் வடுக்கள் உறுத்தக் கூடுமென்று தோன்றியது. வலியை விடவும், வலியின் நினைவுகள் அதிகம் வலிக்கக் கூடியவை.*

*''வித்தியாசமான முயற்சிகளைச் செய்ய விரும்பும் தயாரிப்பாளர்கள் இருக்கிறார்கள். வாலியை எடுத்தவர்தான் சிட்டிசனையும் எடுக்கிறார். தன்னுடைய படம் தோற்றாலும் பரவாயில்லை. என் படத்தில்தான்*

*அஜீத் நல்ல நடிகன் என்று பெயர் வாங்கினான் என்று இருக்க வேண்டும் என்று ஆசைப்படுபவர் அவர். அப்படி ஒருத்தர் எனக்குக் கிடைக்கும்போது, படமும் தோற்கக்கூடாது என்பதில் நான் கவனமாக இருப்பேன்''*

**பேச்சில் தோல்வி, வெற்றி என்ற சொற்கள் அடிக்கடி வந்து கொண்டே இருக்கின்றன. கடந்த காலத் தோல்விகள் உறுத்திக் கொண்டே இருக்கிறதா? ஏன் வெற்றியைப் பற்றி இவ்வளவு அடிக்கடி சொல்ல வேண்டும்?**

*“என் லட்சியம் வெற்றி அடைவதுதான். தொடர்ந்து வெற்றி அடைவது, எப்போதும் வெற்றியடைவது''*

**எது வெற்றி?**

*“அஜீத் இதைச் செய்தான். அவனால்தான் இது முடியும் என்று சொல்ல வேண்டும். என் சினிமா வாழ்க்கை நினைவில் வைத்துக் கொள்ளப்பட வேண்டும்.''*

**எப்படியும் வெற்றி அடைய வேண்டும் என்ற நினைப்பில் ஓடிக் கொண்டிருக்கும் போது, வழியில மற்றவர்களை மிதித்துவிட்டு ஓடுவது கூடத் தெரியாமல் போய்விடலாம் அல்லவா?**

*“நான் யாரையும் மிதிக்க விரும்பவில்லை. நான் என் போட்டியாளர்களை மதிப்பவன். என் முன்னோடிகளை மதிப்பவன். எனக்கு உரியது எதுவோ, அது எனக்கு வந்தே தீரும். பகவத் கீதையில் சொல்லியிருப்பதுபோல “எது நடந்ததோ அது நல்லதற்காகவே இருக்கட்டும்' என்பதுதான் என் கொள்கை''.*

*சட்டென்று ஷாலினி ஞாபகம் வந்தது. பகவத் கீதையை மேற்கோள் காட்டும் இளம் கணவனைப் பெற்றிருக்கும் கிறித்துவப் பெண்.*

**எந்த அளவுக்கு அஜீத்துக்கு மத ஈடுபாடு உண்டு?**

*“கடவுள் நம்பிக்கை உண்டு. எல்லாக் கோயில்களுக்கும் சென்றிருக்கிறேன். தர்கா, சர்ச்சுகளுக்கெல்லாம் போவேன். கும்பிடும்போது ஒருமுறைகூட, என் கஷ்ட காலங்களில்கூட இது வேண்டும். அது வேண்டும் என்று பிரார்த்தித்ததில்லை. ‘எது நடந்தாலும் அது நல்லதாக இருக்கட்டும்' என்றுதான் கடவுளிடம் வேண்டுவேன்.''*

**சடங்குகள்?**

"அவ்வளவாக பின்பற்றுவதில்லை. என் அண்ணனுக்கு மட்டும்தான் பூணூல் போட்டார்கள். எனக்கும் தம்பிக்கும் போடவே இல்லை. என் திருமணம் பதிவுத் திருமணம். நான் என் மதத்தைப் பின்பற்றுகிறேன். அவள், அவளுடைய மதத்தைப் பின்பற்றுகிறாள். நாளை எங்கள் குழந்தைகளுக்கு என் மதத்தைப் பற்றி எனக்குத் தெரிந்ததையெல்லாம் சொல்லித் தருவேன். அவளும் அதேபோல சொல்லித் தருவாள். அவர்களுக்கு எது பிடிக்கிறதோ அதை அவர்கள் செய்யட்டும்."

நாளை.... எதிர்காலம்... வருங்காலத் திட்டங்கள்... அதைப் பற்றியெல்லாம் எத்தனை முறை கேட்டாலும் அஜீத் பேச விரும்பவில்லை. நேற்றைப் பற்றியும், சில சமயங்களில் அஜீத் பேச விரும்பவில்லை. தோல்விகளைத் தாண்டி வந்ததில் அப்பாவைப் போலவே அம்மாவின் பங்கு முக்கியமானது என்று சொல்லும் அஜீத், அம்மாதான் தன் மிக முக்கியமான விமர்சகர் என்கிறார்.

**அம்மாவைத் தவிர வாழ்க்கையில் சந்தித்த மற்ற பெண்களின் பங்கு.?**

"வித் டியூ ரெஸ்பக்ட் டு மை வைஃப். நான் என் கடந்த காலத்தைப் பற்றிப் பேசவிரும்பவில்லை."

**அந்த அளவுக்கு வலிகள் மிச்சமிருக்கிறதா?**

"இந்தக் கேள்விக்கு நான் பதில் சொல்ல விரும்பவில்லை" பதட்டமில்லாமல் நிதானமாகவே இந்த பதிலும் வருகிறது.

இன்றைய அஜீத்துக்கு இன்றுதான் முக்கியம்.

"டுமாரோ ஈஸ் டுடே. இன்றுதான் எனக்கு முக்கியம். நான் அன்றன்றைக்குத்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன். நாளை என்ன என்று கேட்டால், எனக்கு ஒன்றே ஒன்றுதான் சொல்ல முடியும். வெற்றி... சக்ஸஸ்.. தொடர்ந்து நான் சக்ஸஸ் அடைய வேண்டும். அவ்வளவுதான்."

**தமிழ்நாட்டில் சினிமாவில் வெற்றி என்றால் அது அத்துடன் நிற்பதில்லையே. அரசியலுக்கு அழைத்துப் போய்விடும் அல்லது அங்கிருந்து வந்து அழைப்பார்கள். குறைந்தபட்சம் அறிக்கையாவது எதிர்பார்க்கப்படும் இல்லையா?**

"யார் அழைத்தாலும் நான் அரசியலுக்குப் போகமாட்டேன். குடிமகனாக ஓட்டுப் போடுவதோடு சரி. அதுவும் ஒரு முறைதான் போட்டிருக்கிறேன். இன்னொரு முறை என் பெயரே இல்லை."

**அப்படியானால் ரசிகர் மன்றம்? அதுதானே அரசியலுக்கு அழைத்துப் போகும் ஏணி?**

*"ரசிகர் மன்றங்கள் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. என்படம் பார்த்துவிட்டு என்னைப் பாராட்டுகிறார்கள். தியேட்டரில் ஸ்டார் கட்டுகிறார்கள். சரி, பதிலுக்கு நானும் என்னை வருத்திக் கொண்டு ரசிகர்களை சந்தோஷப்படுத்த படத்தில் உழைக்கிறேன். அத்துடன் சரி, ரசிகர் தன் வீட்டை கவனிக்க வேண்டும். குடும்பத்தை கவனிக்க வேண்டும். முடிந்தால் ஏதாவது சமூக சேவை செய்யலாம். வேறு எதுவும் கூடாது."*

**அரசியல் பங்கேற்பு இல்லையென்றாலும், தன்னுடைய தொழில் சார்ந்த பிரச்னைகளில் ஏன் குரல் கொடுப்பதில்லை? கருத்து தெரிவிப்பதில்லை? சில வருடங்களுக்கு முன்பு ஃபெப்சி - படைப்பாளி பிரச்னையில், அடுத்தடுத்து தலைகீழாக பத்திரிகைகளில் பேட்டி கொடுத்த அஜீத், இப்போது மௌனமாக இருக்க என்ன காரணம்**?

*"எனக்கு அப்போதெல்லாம் முதிர்ச்சி இல்லை. இப்போது நான் மெச்சூர் ஆகிவிட்டேன். இப்போதும் எனக்கு கருத்துக்கள் உண்டு. ஆனால், அவற்றை யாரிடம் சொல்ல வேண்டுமோ அவர்களிடம் மட்டும் தெரிவிக்கிறேன்.*

*இன்டஸ்டரி விஷயங்கள் பற்றி விஜயகாந்த் சாரை சந்தித்து என் கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறேன். வெளியில் எல்லாவற்றையும் முன் போல பேசிக் கொண்டிருந்தால், எல்லோருக்கும் தேவையற்ற வருத்தங்கள் ஏற்படுகின்றன. அது தவறு என்று எனக்குத் தெரியவே, என்னை நான் மாற்றிக் கொண்டிருக்கிறேன்."*

**இந்தப் பக்குவம் எப்படி வந்தது?**

*"இப்போதும் கோபம் வருவதுண்டு. உடனே, சட்டென்று பத்து வரை எண்ணுகிறேன். கோபம் போய்விடுகிறது. இப்படித்தான் பயிற்சி செய்கிறேன்."*

*நாங்கள் பேசிக் கொண்டிருக்கும்போதே, ஷூட்டிங் முடிந்து பேக் - அப் ஆகிவிட்டது. நாகேஷ், வி.எஸ்.ராகவன், சுகுமாரி, ஜோதிகா எல்லோரும் அஜீத் உட்கார்ந்திருக்கும் இடத்துக்கு வந்து சொல்லிக் கொண்டு விடை பெறுகிறார்கள்.*

*கடைசியாகக் கேட்கிறேன்.*

**பத்து வருடம் கழித்து நாம் சந்தித்தால் என்னிடம் அப்போது சொல்ல என்ன இருக்கும் அஜீத்?**

*பற்கள் தெரிய, அஜீத்தின் டிரேட் மார்க் சிரிப்பு. எரிச்சலை மறைக்கும் கேடயமோ என்று ஒரு கணம் தோன்றுகிறது.*

*"எதிர்காலம் பற்றிக் கேட்பது உங்களுக்கு ஒரு அப்செஷன் போலிருக்கிறதே?" என்கிற அஜீத், ஒரு மின்னல் போல முகம் மலர்ந்து சொல்கிறார்.*

*"பத்து வருடம் கழித்து நாம் சந்தித்தால் - நாம் தொடர்ந்து இன்னும் நண்பர்களாக இருப்பது எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது என்று சொல்வேன்."*

*சுற்றிலும் பரபரப்பாக இருந்த செட், இப்போது அஜீத்தைப் போலவே அமைதியாக இருக்கிறது. வெளியேறிக் கொண்டிருக்கும் என் காலடிகளுக்குப் பின்னே, காஸ்ட்யூம் பட்டனைக் கழற்ற சிரமப்பட்டுக் கொண்டிருக்கிறார் அஜீத்.*

***விண்நாயகன் 16-1-2001***

